**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590

**ஆணை நாள்: 13.09.2019 (பிற்பகல்)**

**முன்னிலை**

**திரு ச.செல்வராஜ், எம்.ஏ., பி.எட்.,**
**மாநில தகவல் ஆணையர்**

•••••••••

**வழக்கு எண்.SA 2314/E/2017**

திரு M.அய்யாக்கண்ணு ... மேல்முறையீட்டாளர்

Vs.

பொதுத் தகவல் அலுவலர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
மதுரை கிழக்கு வட்டம்,
ஒத்தக்கடை,
மதுரை மாவட்டம். ... பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 07.12.2016 |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | 24.01.2017 |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | 25.03.2017 |

******

**ஆணை**

இன்று (13.09.2019) பிற்பகலில் இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மேல்முறையீட்டாளர் திரு M.அய்யாக்கண்ணு ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர், திருமதி மீனாட்சி, தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், மதுரை கிழக்கு வட்டம், ஒத்தக்கடை, மதுரை மாவட்டம் ஆஜரானார்.

2. மேல்முறையீட்டாளர் 07.12.2016 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கிராம அடங்கல் கணக்கு எண்.2-ல் பசலி சாகுபடி தற்போதைய அடங்கலில் உள்ள 7-ம் கலத்தில் சாகுபடியாளர் என்ற பகுதி உள்ளதென்றும், அதில் தற்போது நிலத்தின் உரிமையாளர் (பட்டாதாரர்) பெயர் பதியப்படுமா அல்லது 1969 ஆம் வருடத்திய 10-வது சட்டமாகிய தமிழ்நாடு விவசாய நிலங்களின் குடிவார உரிமைகள் சட்டம் 3(5) பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட உழவடை (குடிவார குத்தகை) சாகுபடியாளர் பெயர் பசலி சாகுபடி பதிவு செய்யப்படுமா என்ற விபரம், 1969 ஆம் வருடத்தின் சட்டத்தின்படி தனி வட்டாட்சியரால் (Tenant) பதிவு செய்யப்பட்ட உழவடை சாகுபடியாளர் பெயர் தற்போதைய பசலி சாகுபடி அடங்கலில் பதிவு செய்யக்கூடாது என்று அரசு தடை (GO) ஆணை எதுவும் பிறப்பித்து இருந்தால் அதன் உண்மை விபரம் என 6 இனங்களில் தகவல் கோரி, பொதுத் தகவல் அலுவலர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மதுரை மாவட்டம் என விலாசமிட்டுத் தாக்கல் செய்துள்ளார்.

3. மேல்முறையீட்டாளரின் மனுவானது 28.12.2016 தேதியிட்ட கடிதம் வாயிலாகப் பொதுத் தகவல் அலுவலர், தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர், கிழக்கு வட்டம், ஒத்தக்கடை, மதுரை அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. பொதுத் தகவல் அலுவலரால் தான் கோரிய தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை வழங்குமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 24.01.2017 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன்கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர், முதுநிலை தகவல் தொடர்பு அதிகாரி, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மதுரை மாவட்டம் அவர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டாளருக்கு 03.03.2017 தேதியிட்ட கடிதம் வாயிலாக மேல்முறையீட்டு அலுவலரால் தகவல் வழங்கப்பட்டுள்ளது. அதன் பின்னரும் பொது அதிகார அமைப்பினரால் தனக்கு முழுமையான தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலைப் பெற்றுத் தர ஆவன செய்யுமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 25.03.2017 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன்கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (13.09.2019) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் ஆஜராகி, தான் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவிற்குப் பொதுத் தகவல் அலுவலரால் தகவல் வழங்கப்படாததால், சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவும், சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் ஆணையத்திற்கு இரண்டாம் மேல்முறையீட்டு மனுவும் தாக்கல் செய்துள்ளதாகவும், இதுநாள்வரைப் பொது அதிகார அமைப்பினரால் முழுமையான தகவல் தனக்கு வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை முழுமையாக வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடுமாறும் தனது வாதுரையை ஆணையத்தின் முன்பு எடுத்துரைத்தார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

5. இன்றைய விசாரணையில் பொது அதிகார அமைப்பின் சார்பாக ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மேல்முறையீட்டாளருக்கு 03.03.2017 தேதியிட்ட கடிதம் வாயிலாக வழங்கக்கூடிய தகவல் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து உரிய ஆவணங்களை ஆணையத்தின் முன்பு தாக்கல் செய்தார். இதனை ஆணையம் பதிவு செய்கின்றது.

6. விசாரணையின்போது மேல்முறையீட்டாளர் தனக்கு முழுமையான தகவல் கிடைக்கப் பெறவில்லையென்றும், தான் பொதுத் தகவல் அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மதுரை அவர்களிடம் மேற்படி தகவலைக் கோரியதாகவும், எனவே மேற்படி பொதுத் தகவல் அலுவலரையும் விசாரணைக்கு ஆஜராகுமாறு உத்திரவிடுமாறும், தான் கோரிய தகவலை

முழுமையாக வழங்க உத்திரவிடுமாறும் கோரியதனை ஆணையம் பதிவு செய்து, மேல்முறையீட்டாளருக்கு ஒரு வாய்ப்பளிக்கும் வகையில் விசாரணையின் முடிவில் கீழ்க்கண்ட உத்திரவு பிறப்பிக்கப்படுகின்றது:

**இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் மேல்முறையீட்டாளருக்கு அறிவிப்புக் கடிதமொன்றை அனுப்பி, அலுவலக வேலை நாளில், வேலை நேரத்தில், இதர அலுவலகப் பணிகளுக்குக் குந்தகம் ஏற்படாவண்ணம் அலுவலகம் வரவழைத்து, Tamil Nadu Tenancy Act 1989 குறித்த முக்கிய ஆணைத் தொகுப்புப் பதிவுகள் அடங்கிய ஆவணங்களை மேல்முறையீட்டாளரின் ஆய்வுக்கு உட்படுத்தி, ஆய்வு செய்தபின்னர் அது தொடர்பான அரசாணைகள், சம்பந்தப்பட்ட சுற்றறிக்கைகள் எதையாவது சுட்டிக்காட்டி கோரும்பட்சத்தில், அதனை ஒளி நகலெடுத்து, சான்றொப்பமிட்டு, தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 7(6)-ன்கீழ் கட்டணம் ஏதுமின்றி மேல்முறையீட்டாளருக்கு வழங்கி, அதனை அவர் பெற்று ஏற்பளிப்பு செய்த விபரத்தை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 30 தினங்களுக்குள் ஆணையத்திற்குச் சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மதுரை அவர்களுக்கு உத்திரவிடப்பட்டு, இவ்வழக்கில் மேலும் விசாரணை தேவையில்லையென ஆணையம் முடிவு செய்து இவ்வழக்கு இத்துடன் முற்றாக்கப்படுகின்றது.**

**ஒம்/- ச.செல்வராஜ்**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA 2314/E/2017</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
மதுரை மாவட்டம்.

பொதுத் தகவல் அலுவலர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
மதுரை கிழக்கு வட்டம்,
ஒத்தக்கடை,
மதுரை மாவட்டம்.

**<u>மனுதாரர்</u>**

திரு M.அய்யாக்கண்ணு,
த/பெ. G.மாயாண்டிபிள்ளை,
எண்.5/60, மங்களக்குடி,
ஒத்தக்கடை அஞ்சல்,
மதுரை மாவட்டம் - 625 107.

Copy to: Judgement File.
20/09/19